ISSN : 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed

UGC CARE LIST

UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India

Volume : 07, Issue : 01/04 - March 2023

==================================================================

# வள்ளலார் உணர்த்தும் எண்ணுப்பெயர் புணர்ச்சியும், பஞ்ச கோசங்களும்.

==================================================================

**ஆய்வாளர்**
**சை. சுஜிஷ்,**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,*
*இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி மாவட்டம்,*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.*

==================================================================

**ஆய்வுச்சுருக்கம்**

*எண்ணிக்கையைக் குறிப்பதற்குப் பயன்படும் பெயர்ச் சொற்கள் எண்ணுப் பெயர்கள் எனப்படுகின்றன. தமிழ் மொழியில் உள்ள எண்ணுப் பெயர்களை முழு எண்ணுப்பெயர்கள், பின்னங்கள், கலப்பு எண்ணுப்பெயர்கள் என மூன்று வகையாகப் பகுக்கலாம் எனத் தற்காலத் தமிழ் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். புணர்ச்சி விதியில் கூறப்படாத ஒன்பது, பத்து ஆகிய எண்ணுப்பெயர்கள் முன்னர் மற்ற எண்ணும் பெயர்கள் வந்து புணர்தல் பற்றியும், ஒன்று முதல் எட்டு வரையிலான எண்ணுப் பெயர்கள் முன்னர் பத்து வந்து புணர்தல் பற்றியும், எண்ணுப்பெயர்கள் தம்முன் தாமே வந்து புணர்தல் பற்றியும் சில சிறப்பு விதிகளை நன்னூலார் கூறியுள்ளார். மனித வாழ்வையும் இந்த பிரபஞ்சத்துக்கும் அதற்கும் உள்ள தொடர்பையும் அதனில் பல விஷயங்களையும் அள்ளித் தருவது வேதாந்தம். வேதாந்தம் எனப்படும் தத்துவம் உபநிடதங்களின் சாரம். வேதங்களின் அந்தமாக விளங்கும் உபநிடதங்கள் இந்தப் பிரபஞ்சம் குறித்தும் அதன் ஆதாரம் குறித்தும் தேடலை மேற்கொள்கின்றன. ஆத்மா, பிரம்மம் ஆகிய விஷயங்கள் பற்றியும் உபநிடதங்கள் பலவாறாகப் பகுக்கின்றன. மனித உடலை ஐந்து கோசங்களாகப் பிரித்துப் பார்க்கும் ஒரு பகுதி தைத்ரிய உபநிடத்தில் வருகிறது. பஞ்ச கோசங்கள் என்று இவை குறிப்பிடப்படுகின்றன. வள்ளலார் உணர்த்தும் எண்ணுப்பெயர் புணர்ச்சி மற்றும் பஞ்ச கோசங்கள் குறித்து "வள்ளலார் பார்வையில் தொண்ணூறு தொள்ளாயிரம்", "கழித்தல் முறையில் எண்களின் புணர்ச்சி", "மாணவர்கள் எளிய முறையில் கற்க வள்ளலார் கூறும் புணர்ச்சி", "ஒன்பது என்ற எண்ணின் தனித்துவம்","அன்னமய கோஷம்", "மனோமய கோஷம்","விஞ்ஞானமய கோஷம்"மற்றும் "ஆனந்தமய கோஷம்"போன்ற உட்தலைப்புகளின் வாயிலாக இந்த ஆய்வுக்கட்டுரை ஆராயப்படுகிறது.*

**கருச்சொற்கள்**

*எண்ணுப்பெயர்கள், புணர்தல்,பின்னங்கள், கோஷங்கள், உபநிடதம், குணம்*

**முன்னுரை**

*எண்ணிக்கையைக் குறிப்பதற்குப் பயன்படும் பெயர்ச் சொற்கள் எண்ணுப் பெயர்கள் எனப்படுகின்றன. தமிழ் மொழியில் உள்ள எண்ணுப் பெயர்களை முழு எண்ணுப்பெயர்கள், பின்னங்கள், கலப்பு எண்ணுப்பெயர்கள் என மூன்று வகையாகப் பகுக்கலாம் எனத் தற்காலத் தமிழ் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். புணர்ச்சி விதியில் கூறப்படாத ஒன்பது,பத்து ஆகிய எண்ணுப்பெயர்கள் முன்னர் மற்ற எண்ணும் பெயர்கள் வந்து புணர்தல் பற்றியும், ஒன்று முதல் எட்டு வரையிலான எண்ணுப் பெயர்கள் முன்னர் பத்து வந்து புணர்தல் பற்றியும், எண்ணுப்பெயர்கள் தம்முன் தாமே வந்து புணர்தல் பற்றியும் சில சிறப்பு விதிகளை நன்னூலார் கூறியுள்ளார். மனித வாழ்வையும் இந்த பிரபஞ்சத்துக்கும் அதற்கும் உள்ள தொடர்பையும் அதனில் பல விஷயங்களையும் அள்ளித் தருவது வேதாந்தம். வேதாந்தம் எனப்படும் தத்துவம் உபநிடதங்களின் சாரம்.வேதங்களின் அந்தமாக விளங்கும் உபநிடதங்கள் இந்தப் பிரபஞ்சம் குறித்தும் அதன் ஆதாரம் குறித்தும் தேடலை மேற்கொள்கின்றன. ஆத்மா, பிரம்மம் ஆகிய விஷயங்கள் பற்றியும் உபநிடதங்கள் பலவாறாகப் பகுக்கின்றன. மனித உடலை ஐந்து கோசங்களாகப் பிரித்துப் பார்க்கும் ஒரு பகுதி தைத்ரிய உபநிடத்தில் வருகிறது. பஞ்ச கோசங்கள் என்று இவை குறிப்பிடப்படுகின்றன. வள்ளலார் உணர்த்தும் எண்ணுப்பெயர் புணர்ச்சி மற்றும் பஞ்ச கோசங்கள் குறித்து "வள்ளலார் பார்வையில் தொண்ணூறு தொள்ளாயிரம்", "கழித்தல் முறையில் எண்களின் புணர்ச்சி", "மாணவர்கள் எளிய முறையில் கற்க வள்ளலார் கூறும் புணர்ச்சி", "ஒன்பது என்ற எண்ணின் தனித்துவம்","அன்னமய கோஷம்", "மனோமய கோஷம்", "விஞ்ஞானமய கோஷம்" மற்றும் "ஆனந்தமய கோஷம்"போன்ற உட்தலைப்புகளின் வாயிலாக ஆராய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.*

**எண்ணுப்பெயர் புணர்ச்சி**

*ஒன்பது பத்துக்களைத் 'தொண்ணூறு என்றும், ஒன்பது நூறுகளைத் 'தொள்ளாயிரம்'என்றும் வழங்குகிறோம். இருபது, முப்பது, இருநூறு,முந்நூறுபோன்றவற்றிலிருந்து தொண்ணூறு,தொள்ளாயிரம் என்பவை முற்றிலும் வேறுபட்டு விளங்குகின்றன.*

*ஒன்பது × பத்து = தொண்ணூறு என்றும், ஒன்பது × நூறு = தொள்ளாயிரம் என்றும் புணர்வதை நாம் அறிவோம். இந்த இரண்டு தொடர்களிலும் நிலைமொழி, வருமொழி இரண்டுமே முற்றிலும் திரிந்து நிற்கின்றன.ஏனைய எண்ணுப்பெயர்த் தொடர்களிலும், நிலைமொழி திரிந்து நிற்பது இயல்பு எனினும் ஒன்பதை நிலைமொழியாகக் கொண்ட இந்தத் தொடர்களைப் போல அவை முற்றிலும் மாறிடவில்லை.ஒன்பது நிலைமொழியாக நிற்கும் போது மட்டும் ஏன் இவ்வாறு மாறுகிறது என்பதை இங்கு காண்போம்.*

***"ஒன்பான் ஒகர மிசைத் தகரம் ஒற்றும்***
***முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்***
***பஃதென் கிளவி ஆய்த பகரம் கெட***
***நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி***
***ஒற்றிய தகரம் றகாரம் ஆகும்" - தொல்காப்பியம்***

*இந்த நூற்பா ஒன்பதும் பத்தும் இணைவதற்கு இலக்கணம் கூறுகிறது ஒன்பது என்னும் சொல்லில் நிற்கும் ஒகரத்துடன் தகர மெய் சேர்ந்து 'தொ'என்று மாறுகிறது. 'ஒ'வை அடுத்து நிற்கும் 'னகரம்'ணகரமாய் மாறி இரட்டிக்கிறது. 'பத்து'என்னும் சொல்லில் பகரமும் ஆய்தமும் கெட்டு 'ஊ'என்னும் உயிர் தோன்றுகிறது. பத்து என்னும் உயிர் தோன்றுகிறது. பத்து என்னும் சொல்லில் ஈற்றில் நிற்கும் 'து', 'று'ஆக மாறுகிறது. அத்துடன் ஒன்பது என்னும்*

*சொல்லின் பிற்பகுதியில் நிற்கும் 'பது'என்பது மறைந்து விடுவதும் இதன் வாயிலாகப் புலனாகிறது. எனவே, 'ஒன்பது-பத்து-தொண்ணூறு'எனப் புணர்கிறது.இதுவே இந்தத் தொல்காப்பிய நூற்பாவின் வழி நாம் அறிந்து கொள்வது.*

*'ஒன்பது×நூறு=தொள்ளாயிரம்'எனப்புணர்வதற்குத் தொல்காப்பியம் கூறும் புணர்ச்சி இலக்கணம் இங்கு விளக்கப்பட்டுள்ளது.*

***"ஒன்பான் முதனிலை முந்து கிளந்தற்றே***
***முந்தை யொற்றே ளகாரம் இரட்டும்***
***நூறென் கிளவி நகார மெய்கூட***
***ஊ ஆ வாகும் இயற்கைத் தென்ப***
***ஆயிடை வருதல் இகார ரகாரம்***
***ஈறுமெய் கெடுதல் மகாரம் ஒன்றும்"***

*முன்பு கூறியது போலவே இங்கேயும் 'ஒ', 'தொ'வாக மாறுகிறது. இங்கே'ஒ'வை அடுத்து நிற்கும் னகரம் ளகரமாய் மாறி இரட்டிக்கிறது. நூறு என்னும் சொல்லில் நிற்கும் நகர மெய் கெட்டு எஞ்சி நிற்கும் 'ஊ', 'ஆ'வாக மாறுகிறது.அதனுடன் இகரமும் ரகரமும் புதிதாகத் தோன்றுகின்றன. இறுதியில் நிற்கும் 'று'மறைந்து மகர மெய் தோன்றுகிறது. எனவே, 'ஒன்பது × நூறு= தொள்ளாயிரம்'எனப் புணர்ந்து நிற்கிறது.இதுவே நாம் சற்று முன்பு எடுத்துக்காட்டிய தொல்காப்பிய நூற்பா கூறும் இலக்கணம் ஆகும்.*

*தொல்காப்பியம் கூறும் இந்த இலக்கண விதிகளைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால், 'ஒன்பது - பத்து'என்னும் தொடர் சேரும் போது 'ஒன்பது', 'தொண்'என்றும் 'பத்து' , 'நூறு'என்றும் திரிவது புலனாகும். இவ்வாறே ஒன்பது-நூறு என்னும் இரு சொற்களும் சேரும் போது ஒன்பதாவது 'தொள்'என்னும் நூறானது ஆயிரம் என்றும் திரிகின்றன.எனவே,'தொண்+நூறு=தொண்ணூறு'என்றும்தொள்+ஆயிரம்= தொள்ளாயிரம்'என்றும் புணர்கின்றன.இதையே நன்னூலும் கூறுகின்றது.*

***"ஒன்பானொடு பத்தும் நூறும் ஒன்றின்***
***முன்னதின் ஏனைய முரணி ஒவ்வொரு***
***துகரம் நிறீஇப் பஃது அகற்றி னவ்வை***
***நிரலே ண ளவாத் திரிப்பது நெறியே" - நன்னூல்***

*ஒன்பதுடன் பத்து வந்து புணரும்போது பத்தினை நூறக மாற்றுதல் வேண்டும். அப்பொழுது ஒன்பது நூறு என்பதாகும். பின்னர், ஒன்பது என்னும் சொல்லில் முதலில் நிற்கும் 'ஒ'வுடன் தகர மெய்யைச் சேர்க்கத் தொண்பது என மாறும். பிறகு 'தொன்பது'என்னும் சொல்லிலுள்ள 'பது'என்பதை அகற்றத் 'தொன்'என்பது எஞ்சி நிற்கும். 'தொன்'என்பதில் உள்ள 'ன்'இ 'ஐ' , 'ண்'ஆக மாற்ற வேண்டும்.இப்போது 'தொண்'என்பது நிலைமொழி.முன்பு வருமொழியான பத்தை நூறாக மாற்றி அதனை இதனுடன் சேர்க்கத் 'தொண்+நூறு=தொண்ணூறு'என அமையும்.*

*'ஒன்பது'என்பதுடன்' நூறு'என்பது வந்து புணரும்போது நூறு என்னும் வருமொழியை ஆயிரமாக மாற்ற வேண்டும். அப்படி மாற்றும்போது 'ஒன்பது-ஆயிரம்'எனத் தொடர் அமையும். ஏற்கனவே குறிப்பிட்டது போல ஒன்பது என்னும் சொல்லிலுள்ள'ஒ'வுடன்'த்'சேர்த்துத் 'தொ'என்றாக்கினால், 'ஒன்பது ஆயிரம்'என்பது 'தொன்பது ஆயிரம்'என மாறும். 'தொன்பது'என்னும் சொல்லிலுள்ள 'பது'என்பதை நீக்கிவிட்டு எஞ்சியுள்ள 'தொன்'என்னும் சொல்லின் இறுதியில் நிற்கும் 'ன்'ஐ'ள்'ஆக மாற்ற வேண்டும். எனவே 'தொள்-ஆயிரம்'என்னும் தொடர் உருவாகும். இந்தத் தொடரிலுள்ள'ள்'ஐ நீக்கி விட்டுத் 'தொள்ளாயிரம்'என்னும் சொல்லலாம்.*

*தொண்ணூறு,தொள்ளாயிரம் என்னும் எண்ணுப்பெயர்கள் இன்று என்ன பொருளில் வழங்குகின்றன என்பதே நாம் கவனித்துக் கொள்ள வேண்டியது. அதாவது, இந்த எண்ணுப் பெயர்கள் குறிக்கும் எண்கள் யாவை என்பதையே நாம் கவனிக்க வேண்டும். 'தொண்ணூறு'என்பது ஒன்பது பத்தைக் குறிக்கிறதுஎன்பதும் நமக்குத் தெரியும். தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் சொற்கள் வடிவத்தில் மற்ற எண்ணுப் பெளர்களினின்று மாறுபட்டு நின்றாலும், அவற்றின் பொருள் குறித்து நமக்கு ஐயம் ஏற்படுவதில்லை. மேலும் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் தொடர்களைப் பிரித்து எழுதும் வழக்கமுமில்லை. எனவே, இவை ஒவ்வொன்றையும் தனிச் சொற்களாகக் கொண்டு அவற்றின் பொருள் வள்ளலார் வழி நின்று விளக்கப்பட்டுள்ளது.*

***வள்ளலார் பார்வையில் தொண்ணூறு, தொள்ளாயிரம்***

*'தொண்ணூறு,தொள்ளாயிரம்'என்னும் சொற்றொடர்களில் 'தொல்'என்பது அமைந்துள்ளதாக வள்ளல் பெருமான் எண்ணுகிறார்.*

*தொல்+நூறு= தொண்ணூறு, தொல்+ஆயிரம்= தொள்ளாயிரம் எனவும் தொல் என்பது ஒன்று குறையத் தொக்கியது எனவும் தொண்மை,தொல் பிரிந்தது.*

*வழக்கத்தில் தொள்ளாயிரம், தொண்ணூறு என மருவியது எனவும் பத்திடத்திற்கு குறைந்த முன் ஆயிரம் என்னும் ஒன்று குறைந்த பத்து ஒன்பது ஆகிறது. இங்கும் 'தொல்+பத்து=தொன்பது'என மாறியபின், ஒன்பது என மாறலாம். தெலுங்கு மொழியில் ஒன்பது என்பதைத் தொம்மதி என இன்றும் கூறுகிறார்கள்.*

*மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் கூறுவதுபோல, தொண்டு+நூறு என்னும் சொற்கள் இணையும்போது தொண்டு என்னும் சொல்லிலுள்ள 'முகரம்'கெடுகிறது. அப்போது தொண்+நூறு= தொண்ணூறு என மாறலாம். ஆனால், இதே விதி, தொள்ளாயிரம் எனும் தொடருக்குப் பொருந்துவதில்லை.*

*தொண்டு+ஆயிரம் என்னும் சொற்கள் இணையுமிடத்து என்னும் எழுத்து கெடுமிடத்து, தொண்+ஆயிரம் = தொண்ணாயிரம் என ஆக வேண்டும். இப்போதும் எட்டு+ஆயிரம் என்னும் சொற்கள் புணர்ந்து எண்ணாயிரம் எனவும் கூறி வந்திருக்கலாம். ஆனால் இவ்வாறு கூறுதல் வழக்கமில்லை. இந்த நிலையில் வள்ளலார் கூறுவதில் உண்மை என்ன என்று சிந்திக்க முடிகிறது.*

***கழித்தல் முறையில் எண்களின் புணர்ச்சி***

*வள்ளலார் கூறும் முறை கழித்தல் திட்டத்தில் அமைந்துள்ளது. தொல் என்பது அந்த அந்த எண்ணுக்கேற்ப ஓரெண் குறைந்துள்ளது என்பதைக் குறிக்கும் சொல். பத்து என்பதன் முன், அதில் அமைந்துள்ள ஒரு பாகம் குறைந்துள்ள எண்ணைக் காட்ட அதன் முன் தொல் என்றும் அமைக்கப்பட்டது எனக் காட்டுகிறார்.*

*தொல்+பத்து= தொன்பது இதுவே பின் ஒன்பது என மாறிற்று எனலாம். தொல்+நூறு என்பதில் நூறு என்னும் எண்ணிலிருந்து அதன் பத்தில் ஒரு பாகம் குறைந்தது தொண்ணூறு ஆகும். இது போன்ற தொல்+ஆயிரம் என்பதில் ஆயிரம் தொள்ளாயிரம் எனவும் வள்ளல் பெருமான் எண்ணினார். இவர் கூறுவதில், தற்போது புதிதாக வந்துள்ள தசமப் புள்ளி முறையும் ஒரு வகையில் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.*

***மாணவர்கள் எளிய முறையில் கற்க வள்ளலார் கூறும் புணர்ச்சி***

*தொல்+நூறு என்னும் சொற்கள் நன்னூல் 1-2, 37-ல் கூறுவதற்கேற்ற இலக்கண முறைப்படி, தொண்ணூறு என ஆக வேண்டும்.இதேபோலவே தொ+ஆயிரம் நன்னூல் 1-205 இலக்கண முறைப்படி தொல்லாயிரம் என ஆக வேண்டும். ஆனால் லகரத்திற்குப் பதிலாக 'ள'ளிது. வடிவத்தில் வேறுபாடு இருந்தாலும், இந்த இரண்டின் ஒலி வேறுபாட்டைக் கற்றோர் அன்றி மற்றோர் சுலபமாகப் புரிந்து கொள்ள இயலாது. எனவே தொல் என்பது தொள் என மாறி,*

*தொள்+ஆயிரம்=தொள்ளாயிம் எனவும் மாறி இருக்கலாம். இந்தக் கருத்து சுலபமாக இருக்கிறது. ஆதலால் பள்ளி மாணவர்கள் இந்த எளிய முறையைப் புரிந்து கொள்ள சிரமம் இராது என்பது வள்ளல் பெருமான் முடிவு ஆகும்.*

***ஒன்பது என்ற எண்ணின் தனித்துவம்***

*திருநாவுக்கரசர் எனப்படும் அப்பர் பெருமான் பாடிய தனிக்குறுந்தொகை என்பதின் ஒன்பதாவது பாடலில்,*

***"ஒன்ப தொன்பது யானை யொளிகளி***
***றொன்ப தொன்பது பல்களஞ் சூழுவே***
***ஒன்ப தாமவை தீத்தெழி லினடனுரை***
***ஒன்ப தொத்துநின் றென்று ளொடுங்குமோ"***

*என்ற பாடலில், நான்காவது அடியிலுள்ள ஒன்பதொத்து நின்றென்னுளொடுங்குமோ என்னும் வாக்கியம் என்னுடைய உரைகள் எவ்வளவு விரிந்து அமைந்தாலும் முடிவில் என் ஆணவ நிலையில் என் உள்ளத்தே ஒடுங்கும் என்னும் பொருளைக் கொண்டது என்று திருத்தொண்டர் புராண உரையாசிரியர் சி.கே.சுப்பிரமணிய முதலியார் பின்வருமாறு கூறுகிறார்.*

*என் பேச்சுக்கள் முதலிய எல்லாம் விரிந்து சூழலின் முடிவில் நான் என்ற அகங்கார நிலையினவாய், என்னையே சுற்றி என்னகத்தே அடங்கும் அது ஒன்பது என்னும் எண்ணினை பட போலவே இது எப்படி என்றால் ஒன்பதை எதனால் எத்தனை முறை பெருக்கினாலும், பெருக்கி வந்த எண்ணில் உள்ள எண்களைக் கூட்டினால் ஒன்பதே வரும்.*

***9×2=18 = 8+1=9***

***9×4=36 = 6+3=9***

***9×6=54 = 5+4=9***

***9×8=72 = 7+2=9***

***9×3=27 = 2+7=9***

***9×5=45 = 4+5=9***

***9×7=63 = 6+3=9***

***9×9=81 = 8+1=9***

***9×911=8199 = 8+1+9+9=27 = 2+7 =9***

*ஒன்பது என்ற எண் ஒன்று, இரண்டு போன்ற மற்ற எண்களைப் போலத் தனக்கென்று ஒரு தனிப்பெயர் இல்லாமல், பின்வரும் பத்து என்பதில் ஒன்று குறைந்தால் எதுவோ, அது என்று தெரிந்து கொள்ளுமாறு பெயர் கொண்டிருந்தால், என்றறியப்படும் தனித்து நிற்காமல், பத்தினையோ அன்றி ஒத்திருக்கின்றது என்பதும் கடிகார யந்திரங்களிலும், ஒன்பதைக் குறிக்க 7 குறியீடு கொள்வது பிறவும் இங்கு சிந்திக்கத்தக்கதாகச் சிறக்கிறது. இங்கே சிவக்கண்மணி அவர்கள் சுட்டிக் காட்டியுள்ள 7 என்னும் எண்முறை ரோமன் எண் முறை வகையைச் சார்ந்தது. எனவே, வள்ளல்பெருமான் எடுத்துக்கூறிய கருத்துகளுக்கு மயிலைநாதர், சிவக்கண்மணி என்ற பேரறிஞர்கள் ஆய்ந்த உண்மை அரணாக உள்ளது.*

*ஓம் என்னும் பிரவணவத்தில் அகரமாகிய நாதமும் மகாரமாகிய பரவிந்தும் அடங்கியுள்ளன என்று கூறியுள்ளார் வள்ளலார். 'ஒ'என்னும் எழுத்திலுள்ள அகரத்தை பற்றி வள்ளலார் வேறொரிடத்தில் விளக்கியுள்ளார். 'உ''கரம் காத்தல் தொழிலைக் காட்டும் எனவும் சொல்லப்பட்டிருக்கிறது. உகரம் இனிய வகையில் உயிரை இறைவனிடம் அழைத்துச் சென்றவிடத்து தன் நிலையிலிருந்து ஒருபடி தாழ்ந்தாலும், அது தாழ்த்தப்படும் என்பதை உலகுக்கு உணர்த்த ஒன்பது என்னும் சொல் அமைந்துள்ளது எனவும் கொள்ளலாம்.*

***பஞ்ச கோசங்கள்***

*கோசம் என்பதற்கு 'உறை'என்று பொருள். 'நான்'என்ற அபிமானத்தை சரீரங்களின் மீது வைப்பதனால் ஆத்மாவை அறிய முடிவதில்லை.இந்த சரீரங்கள், ஆத்மாவை மறைப்பதனால் இதை கோசம் என்று அழைக்கிறோம்.*

*ஒரு வஸ்துவை பாதுகாப்பதற்காக பயன்படுத்துவதே உறை எனப்படும். எந்த வஸ்துவை கொண்டு ஒரு வஸ்துவை மறைக்க முடியுமோ அதுவே உறை. எது மறைக்குமோ அதுவே கோசம். நம்முடைய ஆத்மாவை அறியவிடாமல் மறைத்துக் கொண்டிருக்கும் ஐந்து உறைகளே பஞ்சகோசங்கள் எனப்படும்.நம்முடைய மூன்று சரீரங்களே ஐந்தாக பிரிக்கப்பட்டு பஞ்சகோசங்கள் என்று அழைக்கப்படுகிறது. ஸ்தூல சரீரமே அன்னமய கோசமாகும். காரண சரீரமே ஆனந்தமய கோசமாக இருக்கிறது. சூட்சும சரீரமே பிராணமய,மனோமய விஞ்ஞானமய கோஷங்களாகும்.இந்த சூட்சம சரீரம் 17 அங்கங்களினுடைய சேர்க்கையே ஆகும்.*

- *ஞானேந்திரியங்கள்*
- *கர்மேந்திரியங்கள்*
- *பிராமணர்கள்*
- *மனம்*
- *புத்தி*

*இந்த சூட்சம சரீரம் மேலும் மூன்றாகப் பிரிக்கப்பட்டு,*

- *இச்சாசக்தி*
- *ஞானாசக்தி*
- *கிரியாசக்தி என்று அழைக்கப்படுகிறது.*

*நம்முடைய அனைத்து செயல்களுக்கு ம் அடிப்படைக் காரணம் இம்மூன்று சக்திகள் ஆகும். உதாரணமாக நாம் ஒரு பொருட்காட்சிக்கு செல்கிறோம். அங்கு ஞானாசக்தி வேலை செய்கிறது.தெரியாத ஒரு பொருள் மீது நாம் ஆசை கொள்ள முடியாது. இந்த ஞானாசக்தி, இச்சாசக்தியை தூண்டுகிறது. அந்த பொருளின் மீது விருப்பம் ஏற்படுகிறது. பிறகு இச்சா சக்தியானது கிரியா சக்தியை தூண்டுகிறது. அந்த பொருளை நாம் வாங்குகிறோம். நம் ஒட்டுமொத்த வாழ்க்கையும் இந்த மூன்று சக்திகளை அடிப்படையாக கொண்டே செயல்படுகிறது.*

***அன்னமய கோஷம்***

*மயம் என்ற சொல்லுக்கு மாறுதல், மிகுதி என்று பொருள். அன்னமய கோஷம் என்பது ஸ்தூல சரீரமாகும். நாம் உண்ணும் உணவினுடைய உருமாற்றமே இந்த ஸ்தூல சரீரம். இச்சரீரம் தோன்றியதே அன்னத்தினால் தான். இச்சரீரம் நிலைத்து வாழ்வதும் அன்னத்தினால்தான். இச்சரீரமானது மீண்டும் உயிரினங்களுக்கும், தாவரங்களுக்கும் உரமாக மாறிவிடுகிறது. அன்னத்தினுடைய சாரத்தினால் விருத்தியடைந்து அன்ன ரூபமான பூமியில் ஒடுங்கி விடுகிறது. இதையே உபநிடமானது, அன்னமே சிருஷ்டி காரணம், ஸ்திதி காரணம், லய காரணம் என்று கூறுகிறது.*

***மனோமய கோஷம்***

*இந்த மனோமய கோஷத்தையே இச்சா சக்தி என்றழைக்கிறோம். இது ஆறு தத்துவங்களை உடையது. இந்த மனோமய கோஷத்தையே இச்சா சக்தி என்றழைக்கிறோம். பஞ்ச ஞானேந்திரியங்களையும் மனம் முதலியவற்றை உள்ளடக்கியது மனோமய கோஷமாகும்.*

- மெய்
- வாய்
- கண்
- மூக்கு
- செவி+மனம்

ஐந்து ஞானேந்திரியங்களின் வழியாகத்தான் இவ்வுலகமானது நம் மனதில் நுழைகிறது. மனதிற்கு நேரடியாக இவ்வுலகத்தை அறியும் ஆற்றல் கிடையாது.

இந்த ஐந்து ஞானேந்திரியங்களும் அடக்கமாகிவிட்டால் மனத்திற்கும் உலகத்திற்குமான இணைப்பு துண்டிக்கப்பட்டு விடும். மனத்திற்கும் இவ்வுலகத்திற்குமான இணைப்புக்கு காரணம் ஞானேந்திரிய பஞ்சகமே.

**விஞ்ஞானமய கோஷம்**

இது ஞானா சக்தியாக விளங்குகிறது. இது ஆறு தத்துவங்களை உடையது.

- பஞ்ச ஞானேந்திரியங்கள் (மெய், வாய்,கண், மூக்கு,செவி)
- புத்தி

எண்ணங்களை ஆராய்ந்து முடிவுகளை தீர்மானிப்பது புத்தியாகும்.

"ஆஹாரநித்ரா பயமைதுனம்
ஸாமான்யமேதத் பஸுபிர் நராணாம ந
புத்திர்ஹிதேஷாம் அதிகோ விஷே
புத்தயாவிஹீனா பஸுபிர்ஸமானா"

**ஆனந்தமய கோஷம்**

காரண சரீரமே ஆனந்தமய கோசம் ஆகும். காரண சரீரம் என்பது அவித்யா ரூபம். அதாவது அறியாமையின் இருப்பிடம் நாம் ஸ்தூல சரீரத்தின் மீது அபிமானம் வைக்கும் போது ஜாக்ரத் அவத்தையும், சூட்சும சரீரத்தின் மீது அபிமானம் வைக்கும் போது சொப்பன அவத்தையும், காரண சரீரத்தின் மீதுஅபிமானம் வைக்கும் போது ஆழ்ந்த உறக்கமும் கிடைக்கிறது. ஆனந்தமும் கிடைக்கிறது.

மூன்று குணங்களின் சேர்க்கையே மாயைத் தத்துவமாகும். அதாவது,

- சத்துவ குணம்
- ரஜோ குணம்
- தமோ குணம்

மாயையிலிருந்து வெளிப்பட்டதுதான் இந்த உலகம். மாயையில் சத்துவ,ரஜோ,தமோ, குணம் இருப்பதாலும் மாயையிலிருந்து இவ்வுலகம் வெளிப்பட்டாலும் இவ்வுலகம் சத்துவ,ரஜோ,தமோ குணங்களாக இருக்கிறது.

அறிகின்ற சக்தியே சத்துவ குணமாகும். செயல்படுகின்ற சக்திக்கு ரஜோ குணம் என்று பெயர். செயல்படாமல் இருக்கின்ற சக்திக்கு தமோ குணம் என்று பெயர். அதாவது ஜட சொரூபம். அறிவற்ற தன்மை ஒரே மனிதனிடம் இந்த மூன்று குணங்களும் இருக்கும்.

ரஜோ குணம் மேலோங்கும்போது கர்மேந்திரியங்கள் துடிப்புடன் விளங்கும் சத்துவ குணம் மேலோங்கும் போது ஞானேந்திரியங்கள் துடிப்புடன் விளங்கும்.

தமோ குணம் மேலோங்கும் போது நம்மிடம் உள்ள சத்துவ ரஜோ குணங்களை கட்டுப்படுத்தி அது மேலே வந்து மனிதர்களுக்கு ஓய்வையும் தூக்கத்தையும் அளிக்கும்.

இந்த தமோ குணம் மேலோங்கவில்லையென்றால் நம் உடலில் செல்கள் புதுப்பித்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாது. இந்த தமோ குணம் மேலோங்கும் சமயத்தில் தான் ஆழ்ந்த உறக்கம் ஏற்பட்டு ஆனந்தமயமாக இருக்கிறோம்.

**தொகுப்புரை**

மொழி என்பது எண்ணும் சேர்ந்ததே ஆகும். ஒரு கண் உள்ள உயிரினம் எதுவும் உலகில் இல்லை. இந்த எண்ணுபெயர்களைப் பற்றிய செய்திகளை பல நூல்களைப் படித்து விளங்க முடிந்தது. வள்ளலார் பார்வையில் தொண்ணூறு தொள்ளாயிரம் என்ற எண்ணுப்பெயர்கள் புணர்வது இங்கு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. மேலும், மாணவர்கள் எளிமையாகக் கற்கும் வகையில் வள்ளலார்அவர்கள் எடுத்தியம்பியதை அறிய முடிகிறது. ஒரு மனிதன் செய்கின்ற வினைகளின் பதிவு சூட்சம உடலில் தங்கி விடுகிறது. அடுத்த பிறவியிலும் அவனைத் தொடர்கிறது. இப்பிறவியிலயே பக்குவ நிலைக்குச் செல்ல முயற்சி செய்தால் சூட்சம உடலில் நமக்கு அனைத்து அவயவங்களும் செயல்படும் என்பதை அறிய முடிகிறது.
ஒன்பது என்பதுடன் நூறு என்பது வந்து புணரும் போது நூறு என்னும் வருமொழியை ஆயிரமாக மாற்ற வேண்டும். அப்படி மாற்றும் போது 'ஒன்பது-ஆயிரம்'எனத் தொடர் அமையும். தொண்ணூறு-தொள்ளாயிரம் என்னும் எண்ணுப் பெயர்கள் இன்று என்ன பொருளில் வழங்குகின்றன என்பதே நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது. எனவே இவை ஒவ்வொன்றையும் தனிச் சொற்களாகக் கொண்டு அவற்றின் பொருள் வள்ளலார் வழிநின்று இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்**


1. அர.ஜெயசந்திரன், வள்ளலாரின் பேருபதேசம், பதிப்பு -2002.
2. இரா.மாணிக்கவாசகம், திருவருட்பா ஆராய்ச்சி -1985.
3. சாமி.சிதம்பரனார், வள்ளலார் வாய்மொழி-2009.
4. திருவருட்பா உரைநடைப்பகுதி (ஞானசபை விளக்க விபவ பத்திரிகை -1978.
5. ப.சரவணன், நவீன நோக்கில் வள்ளலார் -2010.
6. மயிலை சீனி.வேங்கடசாமி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்-1962.
7. வித்துவான் ஜி.எம்.முத்துசாமிப் பிள்ளை, வள்ளலார் தந்த தெய்வத் தமிழ்-1968.


**துணைநின்ற இணையதளம்**


1. http://www.maharishipathanjali.com
2. http://yogipsychology-research.blogspot.com